
இலவச காலாண்டு சமய இதழ்

AKARATHEEPAM



# அகர தீபம்

WWW.AKARAM.EU 14.04.2017 - 13.07.2017



# பிரதோஷ வழிபாட்டின் சிறப்பு

மாலை: 04 - மலர்: 01

திருவள்ளுவர் ஆண்டு 2048

# நுழைவாயில்...

அகரதீபம் ஆன்மீக இதழ் வாசக அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

அகரதீபம் தனது பயணத்தின் நான்காவது ஆண்டில் உங்கள் கரங்களில் கிடைத் திருக்கின்றது தங்களைப்போல் நாங்களும் மகிழ்வு கொள்கின்றோம். வர்த்தக விளம்பரங்கள் அற்ற ஆன்மீக ஆத்ம சஞ்சிகையாக இலவச பிரசுரமாக வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் வெளிவர சன்னதி முருகன் அருளும் உங்களின் ஆதரவும் என்றும் இருக்கும் என்ற நம்பிகை உண்டு.

இன்று தமிழில் நூல்களை படைப்பதும் படிப்பதும் தமிழர் இடையே விரைந்து அழிந்து வரும் பழக்கமாகி விட்டது. உல குக்கே எழுத்தையும் பேச்சையும் எண்களையும் அறிமுகம் செய்து கொடுத்த தமிழ் இனம் இன்று தன்வரியும் தமிழ் வரியும் முக வரியும் கெட்டு உலகின் நாடோடி இனங்களில் ஒன்றாக வாழ்ந்து மடிவதை எமது தலைமுறை நன்றாக சாதித்து வருகிறது.

எழுபது வருடங்களுக்கு முன்னர் தனித்து வமான தேசியமாகத் தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழன் இன்று படிப்படியாக அடையாளம் அழிக்கப்பட்டு வாழ்ந்த வீடும், ஓடி விளையாடிய ஒழுங்கையும், ஊரும், தெருவும், நாடும் இழந்து தமிழன் என்றோ ஈழம் என்றோ பேசிக் கொள்ளவும் உரிமையற்ற அடிமை வாழ்வுக்குள் ஈழத் தமிழ் மக்கள் உள்ளனர். ஒரு காலத்தில் அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகளாக ஆட்சி செலுத்திய தைப் பொங்கல், மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரை புதுவருடம், வைகாசி விசாகம், ஆனி உத்திரம், ஆடிப் பிறப்பு, ஆடி அமாவாசை என மாதம் ஒரு விழா கண்ட இனம் இன்று என்னவாக கிடக்கிறது?

ஒவ்வொரு விழாவின் பொழுதும் வீடுகளிலே பலகாரமோ பணியாரமோ வசதிக்குத் தகுந்தபடி செய்து மகிழ்ந்து கொடுத்து வாங்கி கூடி வாழ்ந்து கொண்டாடியது. மிக அற்பமான கூழையும் பனங்கட்டி சேர்த்து செய்து குடும்பமாய் கூடிக் குதூகளித்துக் கொண்டாடிய இனம் எமது இனம். ஆடிமாத முதல் நாள் ஒருவிழாவாக கொண்டாடியவர் நாம். அதைக் காவியமாக கவிதையாக்கி மக்களின் பாட் டாக இயற்றி மக்களைப் பாடி ஆடிக் கூத்தாட வைத்தார் எமது தாடிப் புலவர் நவாலியூர் சே ாம சுந்தரம் பிள்ளை. ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே! கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்! கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே! எனச் சிறுவர்களாய் பாடி மகிழ்ந்தவர் நம்மில் எத்தனை பேருக்கு இன்று அந்த இனிப்பான நாட்கள் நினைவுக்கு வருகிறது?

எமது இன்றைய தலைமுறைக்கு கூழ் என்றால் என்ன கொழுக்கட்டை என்றால் என்ன அவை எப்படி செய்யப் படுகின்றன என்பதை யாவது சொல்லிக் கொடுத்திருக்கிறோமா? குறைந்த பட்சம் உலகம் போற்றிய எமது தாய் மொழியாம் தமிழ் மொழியை குழந்தை மழலையாகக் கூடப் பேச விடுகிறோமா? நாம் ஒரு செத்த இனமாக மாறி வருகிறோம். தமிழ் ஈழத்தில் பண்பாட்டுத் தொட்டில்களாக விளங்கிய மட்டக் களப்பும் யாழ்ப்பாணமும் இன்று இந்திய சிங்கள தேசங்களாக இந்தியும் சிங்களமும் கோலோச்சும் இராசதானிகளாக மாறிவிட்டன.

இந்திய அமைதிப் படையும் சிங்களப் படையும் எமக்குச் செய்த அனைத்து அட்டூழியங்களையும் மறந்து விட்டு புலிகளின் பயங்கரவாதம் என்ற பல்லவியோடு இந்தியனும் சிங்களவனும் எமது புதிய தலைமுறைக்குப் பாடம் நடத்து கிறார்கள். தமிழ் மக்களை குண்டுகள் வீசி அழித்து கொட்டும் மழையில் 5 இலட்சம் அப்பாவி மக்களை ஒரே இரவில் வன்னிக்கு விரட்டிய சந்திரிகா குமார துங்கவின் பாதம் தொட்டு, இராணுவ அதிகாரிகளின் ஆசி

கேட்டு எமது பிள்ளைகள் வணங்கி ஆடும் புது பரதநாட்டியம் அரங்கேறுகிறது.

போர்க் குற்றங்களுக்காக விசாரிக்கப் பட வேண்டிய சந்திரிகாவும் இலங்கை இந்திய தலைவர்களும் இன்று மாட்சிமை பெற்ற மன்னர்கள் போன்று வந்து போகிறார்கள். தமிழர் புதுவருடக் கொண்டாட்டம் இன்று சிங்கள கவுண் கிரிபத் இந்திய அல்வா ஜிலேபி குலாப் ஜாமூன் என்றும் சிங்கள பைலா ஹிந்தி ஆட்டம் பாட்டம் என்று மாறி வருகிறது. இந்த மாற்றங்கள் முழுமை அடையும் வரை இரண்டு இரண்டு வருடங்களாக உலகம் அவகாசம் கொடுத்து மொத்த தமிழ் இனமும் முழுமையாக அழிபடும் வரை அனுமதிக்கும்.

அதுவரை தமிழ், தமிழர், தமிழ்த் தேசியம் என்ற கெட்ட வார்த்தைகள் எந்தத் தமிழனின் வாயிலும் வராமல் பார்த்துக் கொள்ள சம்பந்தன் சுமந்திரன், மாவை தலைமையிலான ஏகத் தலைமை கடுமையாக உழைக்கும். இவர்கள்தான் தமிழுக்குப் புத்தாண்டு வாழ்த்து களை அனைத்து ஊடகங்களிலும் அள்ளிச் சொரிவார்கள். அதே நேரத்தில் இலங்கை இந்திய அரச தலைமைகளின் முதுகையும் சொறிந்து விடுவார்கள்.

சொறி சொறி ரொம்ப அதிமாகச் சொறிந்து விட்டோமா? என்ன செய்வது அந்த அளவுக்கு நம் எரிச்சல் தாங்க முடியவில்லை. இதை தமிழ் இனம் புரிந்து கொண்டுள்ளதா?

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது தமிழரின் ஆன்மீகம். இதைத்தான் திருமூலநாயனார் படமாடும் ஈசற்கு ஒன்று ஈயில் நடமாடும் நம்பர்க்கு அது ஆகா என்றார் இது பற்றி அடுத்த இதழ் அறிவோம் ஆன்மீகத் தில் தெரிந்து கொள்வோம் என வாழ்த்தி விடை பெறும்,

*அகரதீபம்*
ஆசிரியர் குழு.




அகர தீபம்

**மாலை: 04 - மலர்: 01**

**தலைமை ஆசிரியர்:**
த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்:**
ஆதவன்

**ஆசிரியர் குழு:**
வண்ணை தெய்வம்
வியாசன்

**வடிவமைப்பு:**
இ. ஈழமயூரன்

**ஒப்பு நோக்குனர்:**
திரு. செ. அமுதவாணன்

**தொடர்புகளுக்கு:**


European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 95 66 09
Fax: 00 49 23 81 95 66 10
Email: *akaratheepam@akaram.eu*


**www.akaram.eu**

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY
HOLLAND, SWEDEN, ITALY, CANADA

©ETU e.V. 2014. All rights reserved.

# இந்து மதம் வகுத்துள்ள சாபங்கள்!



நாம் சிறுவயதில் இருக்கும்போது ராமாயணம் போன்ற இதிகாச கதைக ளையும், பல ஆன்மீக கதைகளையும் நமக்கு சொல்லி அவற்றில் உள்ளநீதியை நமக்கு எடுத்து ரைப்பார்கள். அதே நேரத்தில் அந்த கதைகளில் சாப ங்களும், அந்த சாபங்கள் யாரால் யாருக்கு வழங்க ப்பட்டது என்பன போன்ற தகவல்களையும் நமக்கு சொல்லியிருப்பார்கள்.

மேலும் அந்த சாபங்களிலிரு ந்து விடுபட விமோசனம் என்னஎன்பதையும் கதைகளில் வரும் கதாபாத்திரங்களை கொண்டு நமக்கு சொல்லியிருப்பார்கள். அந்த சாபங்கள் எத்தனை வகைப்படும் என்பதையும், அவை ஒவ்வொன்றை பற்றிய விளக்கங்களையும் பார்ப்போம்.

சாபங்கள் மொத்தம் 13 வகையான சாபங்கள் இருக்கி றது என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? இந்த பதிமூன்று (13) சாபங்கள் என்னென்னஎன்பதையும், ஒவ்வொன்றைப்பற்றிய விளக்கங்களையும் தற்போது பார்ப் போம்.

1) பெண் சாபம், 2) பிரேத சாபம், 3) பிரம்ம சாபம், 4) சர்ப்ப சாபம், 5) பித்ரு சாபம், 6) கோ சாபம், 7) பூமி சாபம், 8) கங்கா சாபம், 9) விருட்ச சாபம், 10) தேவ சாபம் 11) ரிஷி சாபம் 12) முனி சாபம், 13) குலதெய்வ சாபம்.

சாபம் சாபங்கள் பல வகைப்படும். அவற்றை ஒவ்வொன்றாக ப்பார்க்க லாம்.

1) பெண் சாபம் :
இது எப்படி ஏற்படுகிறதென்றால், பெண்களை ஏமாற்று வதும், சகோதரிகளை ஆதரிக்காமல் இருப்பதாலும், மனைவியைக் கைவிடுவதாலும் வருகிறது. பெண் சாபம் ஏற்பட்டால் வம்சம் அழியும்.

2) பிரேத சாபம் :
இறந்த மனிதனின் உடலை வைத்துக்கொண்டு அவ ரை இழிவாகப் பேசு வதும், அவருடைய உடலைத் தாண்டுவதும், பிணத்தின் இறுதி காரியங்க ளை செய்யவிடாமல் தடுப்பதும், இறந்தவரை வேண்டிய வர்கள் பார்க்க அனுமதி மறுப்பதும் பிரேத சாபத்தை ஏற்படுத்தும். பிரேத சாபத்தால் ஆயுள் குறையும்.

3) பிரம்ம சாபம்:
நமக்கு வித்தை கற்றுக்கொடுத்த குருவை மறப்பது, வித்தையை தவறாக பயன்படுத்துவது, மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்காமல் ஒரு வித்தையை மறைத்து வைப்பது, இவற்றான காரணங்களால், பிரம்ம சாபம் ஏற் படுகிறது. பிரம்ம சாபத்தால், வித்யா நஷ்டம் அதாவது, படிப்பு இல்லாமல் போகும்.

4) சர்ப்ப சாபம்:
பாம்புகளை தேவையின்றி கொல்வதாலும் அவற்றின் இருப்பிடங்களை அழிப்பதாலும், சர்ப்ப சாபம் உண்டா கும். இதனால், கால-சர்ப்ப தோஷமும் ஏற்பட்டு திரு மணத் தடை ஏற்படும்.

5) பித்ரு சாபம்:
முன்னோர்களுக்கு செய்யவே ண்டிய திதி மற்றும் தர்ம காரியங்களை செய்யாமல் மறப்பதும், தாய்- தந்தை தாத்தா-பாட்டி போன்றோரை உத ாசீனப்படுத் துவதும், அவர்களை ஒதுக்கி வைப்பதும், பித்ரு சாபத்தை ஏற்படுத்தும். பித்ரு சாபம் பாலா ரிஷ்ட சாபத்தையும் ஏற்படுத்தி, வம்சத்தில் ஆண் குழந் தை பிறக்காமல் போவது, குழந்தைகள் இறந்துபோவது போன் றவற்றை ஏற்படுத்தும்.

6) கோ சாபம்:
பசுவை வதைப்பது, பால் மரத்த பசுவை வெட்டக் கொடுப்பது கன்றுடன் கூடிய பசுவைப் பிரிப்பது , தாகத்தால் பசு தவிக்கும் போது தண்ணீர் கொடுக் காதது போன்ற

காரணங்களால் கோ சாபம் ஏற் படும். இதனால், குடும்பத்திலோ வம்சத்திலோ எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் போகும்.

7) பூமி சாபம்:
ஆத்திரத்தில் பூமியை சதா காலால் உதைப்பதும், பாழ்படுத்துவதும், ப்ளாஸ்டிக் பொருட்களைப் போட் டுப் புதைப்பதும், தேவையற்ற பள்ளங்களை உண்டு பண்ணுவதும், அடுத்தவர் பூமியைப் பறிப்பதும் பூமி சாபத்தை உண்டாக்கும். பூமிசாபம் நரகவேதனை யை க் கொடுக்கும்.

8) கங்கா சாபம்:
பலர் அருந்தக்கூடிய நீரை பாழ் செய்வதாலும், ஓடும் நதியை அசுத்தம் செய்வதாலும், கங்கா சாபம் வரும். கங்கா சாபத்தால் எவ்வளவு தோ ண்டினாலும் நீர் கிடைக்காது.

9) விருட்ச சாபம்:
பச்சை மரத்தைவெட்டுவதும், கனி கொடுக்கும் மரத்தை பட்டுப்போகச் செய்வதும், மரத்தை எரிப்பதும், மரங்கள் சூழ்ந்த இடத்தை, வீடு கட்டும் மனையாக்குவதும் விருட்ச சாபத்தை ஏற்படுத்தும். விருட்ச சாபத்தினால், கடன் மற்றும் நோய் உண்டாகும்.

10) தேவ சாபம்:
தெய்வங்களின் பூஜையைப் பாதியில் நிறுத்துவது, தெய்வங்களை இகழ்வது போன்ற காரணங்களால், தேவ சாபம் ஏற்படும். தேவ சாபத்தால் உறவி னர்கள் பிரிந்துவிடுவர்.

11) ரிஷி சாபம்:
இது கலியுகத்தில் ஆச்சார்ய புருஷர்களையும் உண்மையான பக்தர்களை யும் அவமதிப்பது போன்றவற்றால் ஏற்படும். ரிஷி சாபத்தால், வம்சம் அழியும்.

12) முனி சாபம்:
எல்லைதெய்வங்கள், மற்றும் சின்னசின்ன தெய்வங்களு க்கு வழங்க வேண்டிய மரியாதைகளையும் பூஜையையும் மறப்பது முனி சாபத்தை ஏற்படுத்தும். முனி சாபத்தால் செய்வினைக் கோளாறு எற்படும்.

13) குலதெய்வ சாபம்:
இது நமது முன்னோர்கள் பூஜித்த தெய்வத்தை மறக்கா மல் இருப்பது. குலதெய்வ சாபத்தால் குடும்பத்தில் ஒரு போதும் மகிழ்ச்சி ஏற்படாமல் போகும். ஒருவித துக்கம் சூழ்ந்துகொள்ளும்.

சாபம் என்பது நல்லவர்களுக்கு வரமாக மாறும். தீயவர்க ளை அழிக்கும். எவ்வளவு வரங்கள் பெற்றாலும், தாங்க ள் பெற்ற வரத்தின் பலத்தால், நல்லவர்களை ஒரு போ தும் அழிக்கமுடியாது. ஆனால், ஆற்றாமல் அழுது பதறிய நெஞ்சிலிருந்து வந்த வார்த்தை சாபமாக மாறி எப்பேற்பட்ட வலிமையா ன மனிதனையும் அழித்து விடும்.





# தோப்புக் கரணம் போடுவது வழக்கத்துக்கு வந்தது எப்படி?

கஜமுகன் என்ற அசுரன் சிவபெருமானை நோக்கி தவம் செய்து, அதன் வாயிலாக அவரிடம் இருந்து பல வரங்களை பெற்றிருந்தான். பெற்ற வரத்தால் ஏற்பட்ட கர்வம் அவனை தடம் மாறச் செய்தது. தேவர்களை கொடுமைப்படுத்தினான். அவர்களை சிறுவர்களைப் போல பாவித்து தண்டனை வழங்கினான்.

தேவர்கள் அனைவரையும் தனக்கு முன்னால் வரச் செய்து, காதுகளை கரங்களால் பற்றிக்கொண்டு ஆயிரத்து எட்டு தோப்புக்கரணம் போடச் சொன்னான். இந்த தண்டனை காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் நிறைவேற்றப்பட்டது. அத்தோடு இரு கரங்களையும் நெற்றியில் குட்டிக்கொள்ள வேண்டும் என்றும் தேவர்களுக்கு, அசுரன் ஆணையிட்டான். தங்களின் துன்பத்தை போக்கும்படி தேவர்கள், சிவபெருமானிடம் வேண்டினர்.

சிவபெருமான், கஜமுகனை அழிப்பதற்காக தன் மகனான விநாயகரை அனுப்பினார். கஜமுகனுக்கும், விநாயகருக்கும் நடந்த போரில் கஜமுகன் படை அழிந்தது. ஆனால் அவனை அழிக்க முடியவில்லை. காரணம் என்னவென்றால், எந்த ஆயுதத்தாலும் அழியாத வரத்தை அவன் பெற்றிருந்தான்.

அதை உணர்ந்து கொண்ட விநாயகர், தன்னுடைய கொம்புகளில் ஒன்றை ஒடித்து, சிவ மந்திரத்தை உச்சரித்து ஏவினார். இதில் கஜமுகனின் அசுர உருவம் அழிந்து பெரிய எலியின் உருவம் கொண்டான். அந்த எலியின் மீது விநாயகர் அருள்பார்வை பார்த்தார். அந்தப் பார்வையில் விநாயகரின் பாதத்தில் சரணடைந்தான் கஜமுகன். அந்த எலியை தனது வாகனமாக மாற்றிக்கொண்டார் விநாயகப்பெருமான்.

இதனால் மகிழ்ச்சி அடைந்த தேவர்கள், அசுரனிடம் தாங்கள் தண்டனையாக செய்த தோப்புக் கரணத்தையும், நெற்றியில் குட்டும் செய்கையையும், நன்றியுடன் விநாயகப்பெருமானுக்கு செய்தனர். விநாயகரின் முன்பாக நின்று நெற்றியில் குட்டி, தோப்புக் கரணம் போட்டால் நினைத்தது நிறைவேறும் என்பது நம்பிக்கையாகும்.

# சபரிமலைக்கு செல்பவர்கள் கறுப்பு நிற ஆடை, ருத்ராட்சம் அணிவது ஏன்?



சபரிமலைக்கு மாலை அணிகின்றவர்கள் கறுப்பு நிற ஆடை அணிவதும், ருத்ராட்ச மாலையிட்டுக் கொள்வதும் ஏன், வேறு ஏதேனும் நிறம் கொண்ட மாலை அணிவதால் ஏதேனும் குழப்பங்கள் ஏற்படுமோ என்று பக்தர்கள் கேள்வி எழுப்புவதுண்டு.

ஆச்சாரங்கள் எப்போதும் விஞ்ஞானத்துடன் பின்னி பிணைந்திருப்பவை. அதனை அனுசரித்து செயல்பட்டால் மட்டுமே பலனும் கிடைக்கும்.

சபரிமலைக்கு செல்லும்போது சில பிரதான ஆசாரங்களை கடைபிடித்தாக வேண்டும். அது இல்லாமல் போனால் சாதாரண மலையேறுவது போன்றாகிவிடும்.

கறுப்பு ஆடை அணிந்து ஐயப்ப மந்திரங்களை உச்சரித்தால் உடன் பலன் உண்டாகும். மனிதருள் எதிர்மறை மற்றும் நேர்மறை சக்திகள் உள்ளன. இதனை தேவ, அசுர குணங்கள் என்று கூறுவர்.

மனிதரில் எதிர்மறை எனப்படும் எதிர்மறையான சிந்தனைகள் மாறி மனசாந்தியும், சமாதானமும் கிடைக்க ஜெபம் நல்லதாகும். ஜெபிக்கும்போது கறுப்பு ஆடை அணிவதும், ருத்ராட்ச மாலை அணிவதும் ஜெபத்தின் சக்தியை அதிகரிக்க செய்யும்.


ருத்ராட்ச மாலை அணியும்போது 108, 64, 54, 48 என்ற அடிப்படையில் அதன் எண்ணிக்கை இருக்க வேண்டும். ருத்ராட்ச மாலை அணியும் முன்னர் சிவன் கோயிலிலோ, ஐயப்பன் கோயிலிலோ பூஜித்து அணிய வேண்டும்.

# மிருகங்களை தன்னுடைய வாகனங்களாக கடவுள்கள் கொண்டிருக்க காரணம்...









பொதுவாகவே மனிதர்களுக்கு மிருகங்கள் என்றால் ஒருவித பயம், அலர்ஜி இருக்கும், ஆனால் கடவுளின் வாகனமாக பார்த்தால் அவற்றை நாம் வணங்குகிறோம்.

மலைப்பிரதேசங்களுக்கு சுற்றுலா சென்றால் குரங்கை அடித்து விரட்டும் நபர்கள் ஏராளம், அதுவே தெய்வமாக பார்த்தால் ஆஞ்சநேயனாய் மாறி அருள் வழங்குகிறது இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆமாம் ஏன் கடவுள் மிருகங்கள் மீது அமர்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் உள்ளது.

மிருகம் தனக்குரிய இயற்கையான குணத்தை ஆண்டவனின் கட்டளைப்படி கடைபிடிக்கிறது. ஆனால், மனிதன் தனக்குரிய நிலையில் இருந்து மாறி மிருக குணத்துடன் அலைகிறான்.

அவன் மிருக நிலையில் இருந்து, தெய்வ நிலைக்கு உயர வேண்டும். இதனால் தான், மனதில் எழும் எண்ணங்களை மிருகங்களாக உருவகப்படுத்தி, அவற்றை அடக்க வேண்டும் என்ற அடிப்படையில், நமது தெய்வங்கள் அதன் மீது அமர்ந்துள்ளனர்.

அதுமட்டுமின்றி மிருகங்கள் தங்கள் இனத்தைப் பெருக்க வரையறை வைத்துக் கொள்வதில்லை. தன்னைச் சார்ந்த எல்லா மிருகங்களுடனும் உறவு கொள்ளும். பகுத்தறிவு உள்ள மனிதன் அப்படியிருக்கக் கூடாது. தனக்கென ஒருவன் அல்லது ஒருத்தியை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மிருக குணத்தை விட்டொழிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது.



# வைகுண்ட ஏகாதசி பிறந்த கதை!

ஆலிலை மேல் பள்ளிகொண்ட பெருமாள் தன் நாபிக் கமலத்தில் இருந்து பிரம்மனைப் படைத்தார். அப்போது பிரம்மனுக்கு அகங்காரம் மேலிட்டது. அதே வேளையில் பகவானின் காதுகளில் இருந்து இரண்டு அசுரர்கள் வெளிப்பட்டார்கள். அகம்பாவம் பிடித்த பிரம்மனை அப்போதே கொல்ல முயன்றார்கள். பெருமாள் அவர்களைத் தடுத்து பிரம்மனைக் கொல்லாதீர்கள்! உங்களுக்கு வேண்டிய வரத்தை நானே தருகிறேன் என்றார்.

கொஞ்சம் இறங்கி வந்தால், அது தெய்வமாகவே இருந்தாலும் அலட்சியப்படுத்துவது என்பது அசுரர் களின் சுபாவம் போலிருக்கிறது. அசுரர்கள் அலட்சிய மாக, நீ என்ன எங்களுக்கு வரம் கொடுப்பது? நாங்கள் உனக்கே வரம் தருவோம் என்றார்கள்.

ஸ்வாமி சிரித்தார். அப்படியா? சரி! இப்படி அகங்காரம் கொண்ட நீங்கள் என்னால் வதம் செய்யப்பட வேண்டும். அதன் பிறகு ராட்சசர்களாகவே பிறக்க வேண்டும் என்றார்.

அசுரர்கள் திகைத்தார்கள். ஸ்வாமி! தாங்கள் இவ்வாறு எங்களுக்குத் தண்டனை அளிக்கக் கூடாது. தங்களோடு ஒரு மாத காலம் நாங்கள் சண்டையிட வேண்டும்.

அதன் பிறகு தங்களுடைய அருளினால் நாங்கள் ஸித்தி அடைய வேண்டும் என வேண்டினார்கள்.

அவர்கள் வேண்டியபடியே ஒரு மாத காலம் போரிட்டு, பிறகு அவர்களை வதைத்தார் பெருமாள். இறுதியில் மகாவிஷ்ணுவின் குணங்கள் எல்லாவற்றையும் உணர்ந்த அசுரர்கள், தெய்வமே! தங்கள் பரமபதத்தில் நாங்கள் நித்திய வாசம் செய்ய வேண்டும் என வேண்டிக் கொண்டனர். ஒரு மார்கழி மாதம், வளர்பிறை ஏகாதசியன்று (பரமபதத்தின்) வடக்கு நுழைவாயிலைத் திறந்த பகவான், அதன் வழியாக அசுரர்களை பரமபதத்தில் சேர்த்தார்.

அங்கே ஆதிசேஷன் மேல் இருக்கும் அனந்தனின் திவ்விய மங்கல வடிவம் கண்டு பரம ஆனந்தம் அடைந்தனர் அசுரர்கள்.

ஸ்வாமி! பிரம்மா முதலான எல்லோருக்கும் பகவானான தங்களை அர்ச்சாவதாரமாக (விக்கிரக வடிவமாக)ப் பிரதிஷ்டை செய்து, மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி அன்று, தாங்கள் எங்களுக்குச் செய்த அனுக்கிரகத்தை உற்சவமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அன்று (கோயிலில்) வடக்கு நுழைவாயில்வழியாக வெளியே எழுந்தருளும் தங்களை தரிசிப்பவர்களும், தங்களுடன் வடக்கு நுழைவாயில் வழியே வெளியே வருபவர்களும், அவர்கள் எவ்வளவு பெரும் பாவிகளாக இருந்தாலும், மோட்சம் அடைய வேண்டும். இதுவே எங்கள் பிரார்த்தனை! என்று வேண்டினார்கள்.

அப்படியே ஆகட்டும்! என அருள் புரிந்தார் அச்சுதன். ''வைகுண்ட ஏகாதசி அன்று வைகுண்டவாசனை தரிசிப்பவர்கள் அனைவருக்கும் மோட்சம் கிடைக்க வேண்டும்' என நமக்காக அன்றே அசுரர்கள் வேண்டி இருக்கிறார்கள். ஒப்பில்லாத ஸ்வாமியும் அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்.

எனவே, வைகுண்ட ஏகாதசி தினத்தில் இல்லத்தில் விரதம் இருந்து வழிபடுவதுடன் பெருமாள் கோயில்களில் சொர்க்கவாசல் திறப்பு வைபவத்தில் கலந்துகொள்வதாலும், பெருமாளைத் தரிசித்து வழிபடுவதாலும் இம்மை செழிக்கும்; மறுமை சிறக்கும். சகல சௌபாக்கியங்களும் ஸித்திக்கும். வைகுண்டஏகாதசி விரதம் இருப்போம்.



# அறிவோம் ஆன்மீகம் - 9

உள்ளம் பெருங் கோயில் ஊன் உடம்பு ஆலயம்

சென்ற இதழில் மேற்காணும் சொற்களைக் கொண்ட தமிழ் ஆன்மீக முதல்வரும் முனிவருமான திருமூல நாயனாரின் பாடலைக் குறிப்பிட்டு இருந்தோம். இம்முறை அது பற்றிய மேலதிக விளக்கங்களையும் அவற்றை நாம் எவ்வாறு புரிந்து பின்பற்றி வாழ்ந்து நற்கதி அடையலாம் எனவும் பார்ப்போமாக.

அந்தப் பாடல் திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்தரம் என்னும் நூலில் 1823 வது பாடலாகும். இவர் ஒவ்வொரு பாடலையும் வருடம் ஒரு பாடலாக தவம் இருந்து அறிந்து பெற்ற அருளாலே எழுதினார் என்று அவரே தம் பாடலில் கூறியுள்ளார். எனவே இந்த 3000 பாடல்களை எழுதவே 3000 வருடங்கள் தவம் செய்தார் என்பது புலனாகிறது. அப்படியானால் அவர் எத்தனை வருடங்கள் வாழ்ந்தார் என்ற கேள்வியும் எழுகிறது. இதை எப்படி நம்புவது என கேட்கலாம்.

உடலுக்குதான் பிறப்பும் இறப்பும். உயிருக்கு அந்த நிலை கிடையாது. அது இறைவனைப் போன்றே ஆதி அந்தம் இல்லாதது. பிறப்பும் இறப்பும் இல்லாத நிலையை அடைவதே மோட்ச நிலை என்பது சைவ சித்தாந்தம். அப்படியான நிலையில் நாய் என்றும் பன்றி என்றும் அரசன் ஆண்டி என்றும் இந்து முஸ்லிம் கிருஸ்தவன் போன்ற மத வேற்றுமைகளோ இல்லாத ஆனந்த பரவச நிலை. அத்தகைய நிலையை இக்காலத்திலும் சீரடி சாய் பாபா, ராமகிருஷ்ண பரம ஹம்சர், இராமலிங்க அடிகளார், ஈழத்து யோகர் சுவாமிகள் போன்ற பலர் நம்மோடு வாழும் பொழுதே வாழ்ந்ததை நாம் அறிவோம்.

மேலும் திருமூலநாயனார் திருக் கைலாயத்தில் சிவபெருமானால் தட்சி ணா மூர்த்தி வடிவில் ஞான உப தேசம் செய்யப் பட்ட எட்டுப் பேரில்

ஒருவர் என்பதை அவரே தம் பாட்டில் கூறி உள்ளார். சனகர், சனந்தனர், சனாதனர், என்ற நால்வருடன் சிவயோக முனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், ஆகியோருடன் தாமும் என்ற எட்டுப் பேரும் திருக் கையிலையில் ஞானம் பெற்றதை 67வது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டி பாடிய வரிகளில் கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பதாகும். அவர் வாக்குப்படி நாம் இன்றும் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து பல்லாயிரம் மைல்கள் எம் தாயகமாம் ஈழத்தை விட்டு விலகிய அகதி வாழ்விலும் அந்நிய தேசங்களில் வாழும் நிலையிலும் கடைப் பிடிக்கிறோம் என்றால் அது எமது தமிழர் பண் பாட்டிலும் கலாச்சாரத்திலும் காணப்படும் மிகப் பெரும் சிறப்பு எனலாம். அதற்காகவே பிற நாட்டவர் எம்மை வியப்போடு பார்ப்பதையும் காண்கிறோம்.

ஆனால் திருமூல நாயனாரோ நமது உள்ளம் தான் மிகப் பெரிய கோயில். நடமாடும் எமது உடம்பே ஆலயம். நம்மைப் பொய்யான இன்பங்களில் ஆழ்த்த நற்கதி அடைய விடாமல் செய்யும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐந்து புலன்களும் கோயிலில் ஒளி பரப்ப வேண்டிய தூண்டா மணி விளக்கு என்கிறார்.

ஒருவர் மெஞ்ஞான அறிவு பெற்றால் மட்டுமே இந்த 5 புலன்களும் ஞான வாழ்வுக்கு இட்டுச் சென்று உள்ளத்து இறைவனின் கோயிலில் ஒளி கொடுத்து ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்கள் ஏற்படுத்தும் அறியாமை என்ற இருளைப் போக்கி முக்தி வழிக்கு இட்டுச் செல்லும்.

மேலும் பூசைகள் பற்றிப் பாடும் பொழுது இந்தப் பாடல் முக்கிய கருத்தை குறிப்பிடுகிறதை கவனிக்கலாம்.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஓர் பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன் உரைதானே. தி.ம.252

இந்தப் பாடல் மிக எளிதான வழிபாட்டு முறைகளை குறிப்பிடுகிறது. அதாவது கடவுளை வணங்கி ஒரு அறுகோ, வில்வமோ, துளசியோ அல்லது கைக்கு எட்டிய ஒரு இலையை அன்பும் பணிவும் பொங்க போட்டு வணங்க முடியும். அல்லது பசுவுக்கு ஒரு வாயுறை என்பதன் மூலம் பசு மாட்டுக்கு ஒரு கைப்பிடி உணவ கொடுக்க முடியும். அல்லது தாம் உணவருந்தும் பொழுது ஒரு பிடி உணவைக் கூட பிற உயிர்கள் உண்ணும் பொருட்டு கொடுப்பதும் எளிது. இவை எதையும் செய்ய முடியாத வேளையில் பிறருக்கு இனிமையாக சில வார்த்தைகளைப் பேசி அவர்களை ஆற்றுப் படுத்துவம் சிவ வழிபாடுதான் எனகிறார்.

இப்படித் தமிழரின் கடவுளும் வழிபாட்டு முறைகளும் மிக எளிதானவை அதே வேளையில் நிறைந்த பலனைத் தருபவை. இப்படிப் பலவற்றை அடுத்த இதழ்களில் பார்க்க இறை அருள் கிடைப்பதாக.

(தேடல் தொடரும்)



# பிரதோஷ வழிபாட்டின் சிறப்பு

பிரதோஷ தினத்தில் சிவனை வழிபடுவதன் மூலம் பயன்பெறலாம் என்கின்றனர் முன்னோர்கள். பிரதான தோஷங்களை நீக்குவதுதான் பிரதோஷ வழிபாட்டின் சிறப்பு ஆகும்.

சிவனும் சேம நலத்திற்காக வழிபாட்டில் ஈடுபடுவார் என்பது ஐதீகம். எனவே, அனைத்து தரப்பினரும் வழிபாடு செய்யும் நேரத்தில், நாமும் பிரார்த்தனை செய்தால், இதயம் கனிந்து ஈசன் எமக்கு அதிகமான நலன்களை வழங்குவார் என ஜோதிட நூல்கள் கூறுகின்றன.


வாகனத்திற்கு மரியாதை தரக்கூடிய வழிபாடும் பிரதோஷ வழிபாடு ஆகும். சிவனின் வாகனமான நந்தி பகவானுக்கும் மரியாதை செய்யக் கூடியது. நான்கு வேதங்கள், 64 கலைகள் என அனைத்தையும் படித்து முடித்தவர் நந்தீஸ்வரர். சிவனின் சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பவரும் நந்தி பகவான் என்று ஐதீகம் கூறுகிறது. எனவேதான் அவருக்கு அனைத்து வேதங்களும், இதிகாசங்களும் தெரியும் என்று கூறப்படுகிறது.

மெத்தப் படித்திருந்தாலும் நந்தி பகவான் மிகவும் அடக்கமானவர். சி வன் கோயில்களில் அவர் அமர்ந்திருக்கும் தன்மையே இதனை உணர்த்தும்

விதமாக இருக்கிறது. அனைத்தையும் கற்றறிந்த பின்னர் அதனை மனதில் அசைபோடும் வகையில் அவர் அமர்ந்திருப்பது போன்று தோன்றும்.

எனவே, பிரதோஷ பூஜை மேற்கொள்ளும் போது அறிவு வளரும், நினைவாற்றல் பெருகும், தோஷங்கள் நீங்குகிறது.


எவ்வளவு பெரிய தோஷமாக இருந்தாலும் பிரதோஷ காலத்தில் விரதம் இருந்து பசுவின் கறந்த பாலைக் கொண்டு ஈசனை அபிஷேகம் செய்து, வில்வ இலை, சங்குப்பூ வைத்து வழிபட்டால் சிறப்பான பலன் கிடைக்கும். குறிப்பாக மாலை நேர பிரதோஷ பூஜை வழிபாடு மேற்கொள்வது கூடுதல் பலனைத் தரும்.




**ஆலயங்களுக்கான அறிவித்தல்!**

'அகரதீபம்' இதழை பெற்றுக்கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்புகொள்ளவும்!

தொர்புகளுக்கு:
00 49 23 81 98 77 897
00 49 173 75 39 277



# பாண்டவர்களுக்கு தர்ம நியாயங்களை விளக்கிய பீஷ்மர்

குருக்ஷேத்திரப் போரில் சிகண்டியால் வீழ்த்தப்படும் பீஷ்ம பிதாமகர், உத்தராயண புண்ணிய காலத்தில் உடலைத் துறக்க விருப்பம் கொண்டவராக, அர்ஜுனன் தன் கணைகளால் உருவாக்கிய அம்புப் படுக்கையில் படுத்து க்கொள்கிறார். போரின் இறுதியில் கௌரவர்கள் வீழ்த்தப்படுகின்றனர். வெற்றி பெற்ற பாண்டவர்கள், ஆசி பெறுவதற்காக பீஷ்ம பிதாமகரிடம் வருகின்றனர். பீஷ்மர் அவர்களை ஆசிர்வதிக்கிறார்.

யுதிஷ்டிரர் பீஷ்மரிடம், "தங்கள் அன்பாலும் ஆசிகளாலும்தான் எங்களால் போரில் வெற்றி அடைய முடிந்தது. இனி ராஜ்ய பரிபாலனம் செய்யப்போகும் எங்களுக்கு தாங்கள்தான் தர்மநெறிகளை உபதேசிக்கவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

யுதிஷ்டிரர் வேண்டிக் கொண்டபடியே பீஷ்மர் அவர்களுக்கு தர்ம நெறிகளை உபதேசிக்கத் தொடங்கியபோது, திரௌபதி சிரித்து விட்டாள். அசந்தர்ப்பமான சூழலில் திரௌபதி அப்படி சிரித்ததைக் கேட்ட யுதிஷ்டிரர், "எதற்காக சிரித்தாய்?'' என்று கோபத்துடன் கேட்டார்.

யுதிஷ்டிரரை சாந்தப்படுத்திய பீஷ்மர், அதே கேள்வியை திரௌபதியிடம் கேட்டார். "அன்று துரியோதனன் சபையில் நான் அவமானத்துக்கு உள்ளான போது, அந்த அநியாயத்தைத் தடுக்காமல் இருந்த தங்களிடம் தர்ம நியாயங்களை உபதேசிக்குமாறு கேட்டதும் என்னை அறியாமல் சிரித்துவிட்டேன். அன்பு கூர்ந்து மன்னியுங்கள்'' என்றாள் திரௌபதி.

பீஷ்மர், "துருபதன் மகளே, நீ அப்படி நினைத்துச் சிரித்ததில் தவறு இல்லை. இங்கே உன்னிடம் ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அன்று துரியோதனன் சபையில் உனக்கு அநீதி இழைக்கப்பட்டபோது நான் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்ததற்குக் காரணம், அப்போது என்னுடைய உடலில் ஓடிய ரத்தம் துரியோதனன் தந்த உணவால் உண்டானது.

அதனால்தான் என்னால் அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடியவில்லை. ஆனால், இப்போது போர்க்களத்தில் என்னுடைய உடலில் துளைத்த அம்புகள் அத்தனை ரத்தத்தையும் வெளியேற்றிவிட்டன. எனவே, இப்போது நான் தர்மநியாயங்களை உபதேசிப்பதில் தவறு இல்லைதானே?'' என்று கேட்க, அவசரப்பட்டு சிரித்ததற்காக பீஷ்மரிடம் மன்னிப்பு கேட்ட திரௌபதி, தானும் அவருடைய உபதேசங்களைக் கேட்கக் காத்திருப்பதாக கூறினாள்.

பீஷ்மர், பாண்டவர்களுக்கு தர்மநியாயங்களை எல்லாம் விரிவாக எடுத்துக் கூறினார். பின்னர் இறுதியாக, கலியின் துன்பங்களை எல்லாம் போக்கும் அதிஅற்புதமான ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிறார். அதுதான் விஷ்ணுசஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.

பகவானின் ஆயிரம் நாமங்களின் மகிமைகளை பாண்டவர்களுக்கு உபதேசித்த பீஷ்மர், அந்த பகவான் வேறு யாரும் இல்லை. உங்களுக்கு சதாசர்வ காலமும் உற்ற துணையாக இருக்கும் கிருஷ்ணரே..! என்றும் விளக்கினார்.



# நிம்மதியான வாழ்வு தரும் முருகனுக்கு உகந்த விரதங்கள்

முருகப்பெருமானை வழிபடும் பக்தர்கள் மேற்கொள்ளும் முக்கிய விரதங்கள் மூன்று. கார்த்திகை-கிருத்திகை விரதம், சுக்கிர - வெள்ளிக்கிழமை விரதம், சஷ்டி விரதம்.

கார்த்திகை நட்சத்திரத்தன்று முருக பக்தர் விரதம் இருந்து முருகனை வழிபடுகிறார்களோ அவர்களுக்கு செல்வம், கல்வி, ஆயுள், நல்ல மனைவி, நன்மக்கட் பேறு, பசுக்கள், நிலபுலம், நிம்மதியான வாழ்வு ஆகிய எல்லாம் கிடைக்கும்.

விரதம் இருப்பது எப்படி?

கார்த்திகையில் வரும் பரணியன்று பகலில் உண்டு இரவில் உண்ணாது இருக்க வேண்டும். கார்த்திகை அன்று காலையில் நீராடி முருகன் கோயில் சென்று வழிபடவேண்டும். தண்ணீர் மட்டும் அருந்தி முருகனின் அருட்பாடல்களை பாராயணம் செய்ய வேண்டும். முழு தினமும் முருகனை தியானம் செய்ய வேண்டும். மறுநாள் ரோகிணியன்று காலையில் நீராடி நித்திய வழிபாடு செய்து, அன்னதானத்திற்கு பிறகு அமுது செய்ய வேண்டும். (சைவ உணவு, பூண்டு, வெங்காயம் தவிர்க்கவேண்டும்). பிறகு ஒவ்வொரு மாதமும் வரும் கார்த்திகையன்று விரதம் மேற்கொள்ள வேண்டும்.

சுக்கிர விரதம்

சுக்கிரவார (வெள்ளிக்கிழமை) விரதம் விநாயகர், அம்பிகை, முருகப்பெருமான் ஆகிய மூவருக்கும் உரியது. ஐப்பசி மாதம் முதல் சுக்கிர வாரத்தில் தொடங்கி முன்சொன்னபடி

வெள்ளிக்கிழமை தோறும் விரதம் இருக்க வேண்டும்.


சஷ்டி விரதம்

ஐப்பசி மாதம் வளர்பிறை (சுக்கிலபட்சம்)யில் வரும் பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாட்கள் விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விடியற்காலை எழுந்து நீராடி, நித்திய கடன் முடித்த பின் பூரணகும்பம் வைத்து நீர் பரப்பி, மாவிலை வைத்து தருப்பையைப் பரப்பி அதன்மீது சந்தனம் வைத்து குங்குமம் அட்சதை இட்டு, முருகப்பெருமானை அதில் எழுந்தருளச் (ஆவாகனம்) செய்து, மலர் தூவி, தூப தீபம் காட்டி அர்ச்சனை செய்து வழிபடவேண்டும்.

பகலில் உறங்கக் கூடாது. ஆறு நாட்களும் முருகப்பெருமான் அருட்பாடல்களை ஓதவேண்டும். தியானம், ஜபம் செய்ய வேண்டும். அருகிலுள்ள முருகன் கோவிலில் நடைபெறும் சஷ்டி விழாக்களில் தினமும் கலந்து கொள்ள வேண்டும்.

சூரசம்ஹாரவிழா, திருக்கல்யாண விழாக்களை கண்டு களித்து அதன்பின் விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். மாதம் தோறும் வளர்பிறை சஷ்டியில் ஒருநாள் இதுபோல் விரதம் மேற்கொள்ளலாம். விரதம் இருப்பவர் எண்ணிய நலன் பெறுவர், புண்ணிய பலம் பெறுவர். ஓம் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா, வேல் வேல் வெற்றிவேல்!!!

## பூஜை நிறைவில் தீர்த்தமும் பிரய்வதமும் வழங்கப்படுவது எதற்கு?



வீட்டில் பூஜை செய்யும் போது சிறு செம்பு அல்லது கிண்ணங்களில் நீர் வைப்பது வழக்கமாக உள்ளது. பொதுவாக புண்ணிய நதிகளின் நீரையே இதற்கு பயன்படுத்த வேண்டும். எனினும் அதற்கு எல்லோருக்கும் வசதி இருக்காது என்ற வகையில் வீட்டிலுள்ள நிறை குடத்து நீரை, காவிரி, கங்கை, தாமிரபரணி, வைகை போன்ற புண்ணிய தீர்த்தங்களாகக் கருதி பக்தியுடன் நிரப்ப வேண்டும்.

பூஜை முடிந்ததும் அதனை பக்தியுடன் பருக வேண்டும். அத்துடன் ஒரு உருண்டை சாதம், கற்கண்டு, பழம், வெற்றிலை, பாக்கு என்பனவற்றையும் படைக்க வேண்டும்.



# சிவனுக்கு உகந்த ஆனி உத்திரம் விரதம்


உலகெங்கிலும் வாழும் இந்துப் பெருமக்களுக்கெல்லாம் மூலப்பரம்பொருளாக இருந்து இந்த உலகையும் மக்களையும் காத்து வருகின்ற சிவனுக்குகந்த நாட்களில் ஒன்றாக ஆனி உத்திரம், ஆனி திருமஞ்ச னம் மற்றும் நடேசரபிஷேகம் தரிசனம் என்பன அமையப்பெற்ற ஒரு நன்னாள் ஆகும்.

ஒரு வருடத்தில் சிவபெருமானுக்கு 6 நாட்கள் மிக சிறப்பு வாய்ந்த நாட்களாக, அதாவது அபிஷேகத்திற்கும் சி வதரிசனத்திற்கும் உகந்த நாட்களாக சொல்லப்படுகின்றன.

இதில் ஆனி மாதம் ஷஷ்டி திதியும் சேர்ந்த ஆனி உத்திர தரிசனம் மிக சி றப்பு வாய்ந்தது என ஆகமங்களில் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. முருகன் அலங்காரப் பிரியன் என்பது போல் சிவன் அபிஷேகப் பிரியன் ஆவார்.

நாம் சிவபெருமானது திருவருளைப்பெற அவரது மனம் குளிரத்தக்கதாக அபிஷேகங்களை சிவாலயங்களில் செய்ய வேண்டும். இவற்றுடன் வருடத்தில் சிவனுக்கு அபிஷேக தினங்களாகவும் தரிசன காட்சியாகவும் உள்ள தினங்களில் தவறாது அதிகாலை சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்யவேண்டும்.

இதனால் இப்பூவுலகில் கிடைத்தற்கரிய சகல பாக்கியங்களையும் பெற்று இன்புற்று வாழலாம் என புராணங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன.



# கண் திருஷ்டி என்பது உண்மையா?

## அதற்கு என்ன செய்யலாம்?

கல்லால் அடிபட்டாலும் கண்ணால் அடிபடகூடாது என்பார்கள் இதைதான் சுருக்கி கல்லடிபட்டாலும் கண்ணடி படகூடாது என்பார்கள்.

ஒட்டுமொத்த பார்வையும் தன் மேல் விழுந்திருக்கிறது என்று சொல்வார்களே அது தான்.

இதில் குறிப்பாக தாவரங்களுக்கு கண் திருஷ்டியை எடுக்கக் கூடிய குணங்கள் நிறைய உண்டு. தொங்கும் தோட்டம் போன்றதெல்லாம் அமைக்கலாம். ரோஜா முட்கள் உள்ள செடி. அதுபோன்று முள் செடிகள் இருக்கும்படியும் வைக்கலாம். இந்த மாதிரி எளிய பரிகாரங்கள் நிறைய இருக்கிறது.

மற்றும் சிலர் பூசணிக்காயை கட்டித் தொங்க விடுவார்கள். சிலர், நாக்கு வெளியே தொங்கவிட்டுக் கொண்டிருக்கிற பொம்மையை வைத்திருப்பார்கள். சிலர் பிள்ளையாரை வைத் திருப்பார்கள். இன்னும் சிலர் கற்றாழையைக் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். இது போன்று சிலவற்றை செய்யலாம். இதெல்லாம் பயனுள்ளதாக இருக்கும்.

வாசலுக்கு மேல்...ஒரு எலுமிச்சை, ஒரு பச்சை மிளகாய் என மாற்றி மாற்றி 3 எலுமிச்சை நான்கு பச்சை மிளகாய் என கெட்டியான கயிறில் கோர்த்து தொங்கவிடலாம்.

சாதாரணமாகப் பார்த்தீர்களென்றால் கற்பக விநாயகர் கண் திருஷ்டிக்கு நல்ல பாது காப்பாக இருப்பார். சிலரெல்லாம் எல்லைத் தெய்வங்களோட படம், ஆயுதங்களோடு இருக்கக்கூடிய படத்தை வைத்திருப்பார்கள். வெளியில் இருந்து பார்க்கும் ஒட்டுமொத்த பார்வையையும், சிந்தனையையும் திசை திருப்புவதற்கு ஏதேனும் ஒரு பொருளை வாசலிலேயே தொங்கவிடுவது நல்லது. அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். குறிப்பாக இயற்கைத் தாவரங்கள், செடிகொடிகள் போன்றவற்றிற்கு ஆதிக்கம் அதிகமாக இருக்கும்.

வாழைக்கன்று நடும் அளவிற்கு இடமிருந்தால் அது மிக மிகச் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் வாழை ஒவ்வொரு விநாடியும் துளிர்த்துக் கொண்டே இருக்கும். எந்தெந்த திருஷ்டி இருக்கிறதோ அதை அப்பப்பவே களைந்து விடும். வாழைக்கு அந்த அருங்குணம் உண்டு. அதை வைத்தால் இன்னும் நல்லது.



# கிருஷ்ணர் நாரதர் உரையாடல்

நாரதர் ஒரு சமயம் கிருஷ்ணரைத் தரிசிக்கச் சென்றார். அவரை கிருஷ்ணர் ஆசீர்வதித்தார். இருவரும் உரையாடியபடியே உலாவச் சென்றார்கள்.

அப்போது நாரதர், கிருஷ்ணா! உங்களுடைய மாயை மிகவும் வலிமை வாய்ந்தது என்று சொல்கிறார்கள். அது உண்மைதானா? தேவரிஷி என்று எல்லோரும் என்னை அழைக்கிறார்கள். பிரம்மத்தை (தெய்வத்தை) உணர்ந்த பிரம்ம ஞானியாகிய என்னை உங்களுடைய மாயை என்ன செய்யும்? மாயையால் நானும் பாதிக்கப்படுவேனா? என்று கேட்டார்.

அதைக் கேட்ட கிருஷ்ணர், நாரதரின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், சற்று தூரத்திலிருந்த ஒரு குளத்தைச் சுட்டிக்காட்டி, நாரதரே! அதோ அந்தக் குளத்தில் மூழ்கி எழுந்து வாருங்கள் என்று கூறினார். கிருஷ்ணர் கூறியபடியே, நாரதர் தன் கையில் இருந்த மகதி என்ற வீணையைக் குளக்கரையில் வைத்துவிட்டு, குளத்தில் சென்று மூழ்கி எழுந்தார்.

மூழ்கி எழுந்தாரோ இல்லையோ, அவர் அழகிய இளம் பெண்ணாக மாறியிருந்தார்! தான் நாரதர் என்ற பழைய நினைவுகள் அனைத்தும் அவருக்கு அறவே இல்லாமல் போயிற்று குளக்கரையில் அவர் வைத்த வீணையும் இல்லை. கிருஷ்ணரும் அங்கு இல்லை.

இப்போது நாரதப் பெண், குளத்தின் படிகளில் ஏறி மேலே வந்து கொண்டிருந்தாள். அந்த வழியாக அந்த நாட்டு அரசன், குதிரையில்

வேகமாக வந்தான். அவன் இளைஞன், அழகானவன். நாரதப் பெண்ணை அவன் பார்த்தான். அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான்.

நான் இந்த நாட்டின் அரசன். உன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன், உனக்குச் சம்மதமா? என்று கேட்டான்.

நாரதப் பெண் மவுனமாகத் தலையசைத்து, தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

அரசன் அவளைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

இருவருக்கும் முறைப்படி திருமணம் விமரிசையாக நடந்தது. இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு

அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஒரு சமயம் பக்கத்து நாட்டு அரசன், இந்த நாட்டு அரசன் மீது போர் தொடுத்தான்.

இருதரப்புக்கும் கடுமையாகப் போர் நடந்தது.

போர்க்களத்தில் நாரதப் பெண்ணின் கணவன் கொல்லப்பட்டான். அதைத் தொடர்ந்து, நாரதப் பெண் இருந்த நாட்டின் தலைநகரைக் கைப்பற்றுவதற்கு பகைவர்கள் விரைந்து வந்தார்கள்.



அப்போது வீரர்கள் சிலர், போர்க்களத்தில் இருந்து தப்பி அரண்மனைக்கு வந்து நாரதப் பெண்ணிடம், அரசியாரே! போரில் நமது அரசர் கொல்லப்பட்டார்! பகைவர்கள் அரண்மனையைக் கைப்பற்ற நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள்! உங்களையும், நமது அரச குமாரர்களையும் பகைவர்கள் சிறை பிடிப்பதற்குள் இங்கிருந்து நீங்கள் தப்பிச் சென்றுவிடுங்கள், என்று கூறினர்.

நாரதப் பெண்ணும்,

குழந்தைகளுடன் அரண்மனையிலிருந்து தப்பி ஓடினாள். ஆனாலும், பகைவர்கள் இதை அறிந்து விட்டனர். அவளைத் தேடிச் சென்றனர். அவர்கள் தன்னைத் துரத்தி வரும் சப்தம் அவளுக்குக் கேட்டது. அவள் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வேக வேகமாக அருகிலிருந்த காட்டிற்குள் ஓடினாள்.

விரைந்து ஓடியபோது, அவள் தன் மூத்த மகனின் கையைத் தவற விட்டாள். இப்போது அவள் தன் ஒரு குழந்தையை மார்போடு அணைத்தபடியே ஓடிக்கொண்டிருந்தாள். இதற்குள் பகைவர்கள் அவளை மிகவும் நெருங்கி விட்ட ஆரவாரம் கேட்டது. இதனால் பயந்து வேக த்தை அதிகரித்த போது, அவள் கையில் இருந்த குழந்தையும் தவறி கீழே விழுந்தது.

குழந்தையை எடுக்க முடியவில்லை. பகைவர்களிடம் சிக்காமல் தப்ப கல்லிலும் முள்ளிலும் விழுந்தாள். அதனால் உடலில் பலமான காயங்கள் ஏற்பட்டன. நீண்ட தூரம் ஓடிய பிறகு, பகைவர்கள் துரத்தி வந்த சப்தம் கேட்கவில்லை. பகைவர்களிடமிருந்து தப்பியதை அவள் உணர்ந்தாள்.

காட்டிலிருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்து தன் நிலையை நினைத்து அவள், ஐயோ! என் நிலை இப்படி ஆகிவிட்டதே! நான் என் கணவரை இழந்துவிட்டேன்! குழந்தைகளையும் பறிகொடுத்து விட்டேன். நாட்டையும் பகைவர்கள் பிடித்து விட் டார்கள். ஆதரவற்ற அநாதையாக நான் இப்போது இருக்கிறேன். இனிமேல் நான் யாருக்காக உயிர் வாழ வேண்டும்? கல்லிலும் முள்ளிலும் அடிபட்டு உடல் முழுவதும் ஏற்பட்ட இந்தக் காயங்களின் வலியை என்னால் பொறுக்க முடியவில்லை. பசியும் தாகமும் என்னை வருத்துகின்றன! என்று பலவாறு கூறி கதறி அழுதாள்.

அப்போது கிருஷ்ணர் ஒரு முதியவர் வடிவத்தில் அங்கு வந்து, அம்மா! நீ யார்? ஏன் இப்படி இந்தக் காட்டில் தனிமையில் அழுது கொண்டிருக்கிறாய்? என்று கேட் டார். நாரதப் பெண், தன்னுடைய அவல நிலையை அவரிடம் கூறி அழுதாள். முதியவர் அவளிடம், அம்மா! அதோ தெரியும் அந்தக் குளத்தில் நீராடி விட்டு வா! அதனால் உனக்கு நன்மை ஏற்படும், என்று தெரிவித்தார்.

முதியவர் கூறியபடியே நாரதப் பெண் குளத்தில் மூழ்கி எழுந்தாள். உடனே நாரதப் பெண் உருவம் மாறி, பழைய

நாரதர் வடிவம் கொண்டார். அவருக்கு நடந்தவை அனைத்தும் நினைவுக்கு வந்தன.

குளத்தின் படிகளில் ஏறி வந்த நாரதர், குளக்கரையில் தான் வைத்துச் சென்ற வீணையை எடுத்துக் கொண்டார். ச ற்று தூரத்தில் கிருஷ்ணர் நின்று கொண்டிருப்பதையும் பார்த்தார்.

நடந்ததையெல்லாம் நாரதர் நினைத்துப் பார்த்த படியே கிருஷ்ணரிடம் சென்று, பகவானே! நான் கர்வம் கொண்டதற்கு என்னை மன்னியுங்கள். உங்கள் மாயை மிகவும் வலிமை வாய்ந்தது என்பது உண்மை தான். மாயைக்கு நான் ஒருபோதும் வசப்படாமல் இருக்க வேண்டும் என்று என்னை ஆசீர்வதியுங்கள், என்று வணங்கிக் கேட் டுக்கொண்டார்.



கிருஷ்ணரும் நாரதரின் பிரார்த்தனையை ஏற்று ஆசீர்வதித்தார்.வாழ்க்கை என்ற ஒன்று இருக்கும் வரை இதுபோன்ற மாயை இருந்து கொண்டே இருக்கும். இதில் இருந்து விடுபட ஒரே வழி இறைவனைச் சரணடைவது தான்.

முக்குணங்களால் ஆகிய என்னுடைய இந்த மாயை தெய்வீகமானது, யாராலும் கடக்க முடியாதது. ஆனால் யார் என்னையே சரணடைகிறார்களோ, அவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள்.

- பகவத்கீதை 7.14




# மாமாங்கேதீச்சரம் (மட்டக்களப்பு)

ஆடி அமாவாசை என்றால் யாழ்ப்பணத்து மக்கள் எப்படி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று அமரத்துவம் அடைந்த தங்களது தகப்பனின் நற்சாந்திக்காக விரதமிருந்து தெற்பை போட்டுக் கிருபைகள் செய்து தங்கள் நற்கடமைகளை செய்து கொள்வார்களோ! அப்படித்தான் மட்டக்களப்பு,வாழ் தமிழ் மக்களும் மாங்கேத் தீச்சரத் திருத்தலத்தையே நாடுவார்கள். அவ்வளவு தூரம் ஆடி அமாவாசை தீர்த்தச் சிறப்பிற்கு பேர்போன திருத்தலமாக விளங்குவது இப்பகுதியில் விளங்கும் பெருமை இவ் ஆலயத்திற்கு உண்டு.

இந்த ஆலயம், பெயரிலும், ஆலய உள் கட்டமைப்பிலும் சில மாறுபாடுகளைக் கொண்டதாகவே விளங்குகின்றது! ஈஸ்வரம் அல்லது ஈச்சரம் என்று வழங்கும் பெயர் கொண்ட மாமாங்கக் கோவில் சிவன் கோவிலாகவே கருதப்பட்டாலும் மாமாங்கப் பிள்ளையார் கோவிலாகவே மட்டக்களப்பு மக்களால் அழைக்கப்படுகின்றது! அதற்கு முக்கிய காரணம் ஆலய மூலதனத்தில் உள்ள சிவலிங்கமானது பெரும்பாலும் விநாயகர் அங்கியுடனேயே காட்சியளிப்பதால் விநாயகரே மூலஸ்த்தனத்தில் எழுந்தருளியிருக்கின்றார் என பக்தர்கள் கருதிக்கொள்கின்றார்கள்.

இத்திருத்தலத்தின் மூர்த்தியைப் பற்றியும் தீர்த்தினைப் பற்றியும் தொன்று தொட்டு வரும் ஐதீகமான கதைகள் பல இங்கிருக்கின்றன. இவை இரண்டும் இராமாயண காலத்துடன் சம்பந்தப் படுத்தப்பட்டுப் பேசப்படுகின்றன. அத்துடன் காசியில் இருந்து வந்த ஒரு முனிவர் தம் மண்டலத்தில் கொண்டு வந்த கங்கை, ஐமுனை,

சரஸ்வதி, கோதாவாரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிராபரணி, சேது முதலான ஒன்பது மங்கை (பெண்களின் பெயராலமைந்த) தீர்த்தங்களையும் இத்திருத்தலத்தில் அமைந்துள்ள குளத்தில் கலந்து நீராடி இராமலிங்கத்தை வழிபட்டு பெரும் பெயர் பெற்றார் என்றும் அது எல்லா மங்கை நதிகளினதும் தீர்த்தம் கலக்கப்பெற்ற திருக்குளமாததால் மாமாங்கத் தீர்த்தம் என இது பெயர் பெற்றதென்றும் தீர்த்தப் பெயர்க் காரணமும் ஐதீகமாக வழங்குகின்றது.

மாங்கேச்சுரர் கோவில் இருக்கும் எல்லைக்குட்பட்ட பகுதி "மாமாங்கம்" என்னும் பெயருடைய ஊராகவே அழைக்கப்படுகின்றது. எனினும் மாமாங்கம் சார்ந்த மக்கள் குடியிருப்பு ஊர்ப்பகுதியின் பெயர் அமிர்தகழி என்பதே ஆகும்.

பிள்ளையாரும் சிவபெருமானும் இருவேறு தெய்வங்கள் அல்லர் "ஓம்" எனப்படும் பிரணவமே மூல ஒலி என்றும் விநாயகப் பெருமான் அப்பிரணவமே வடிவானவர் என்றும் கூறுவர். எனவே அனைத்துக்கும் மூலமான பரம்பொருளாகிய சிவமும் பிரணவமும் வேறு வேறானவையல்ல என்ற தத்துவத்தைப் போதிப்பதே விநாயகர் அங்கியுடன் சிவ பெருமான் அழிக்கும் ஒளி வடிவின் உட்பொருளாகும் என்று ஆன்றோர் கூறுவர்.

இத் தலத்தில் ஆடி அமாவாசைக்குப் பத்து நாட்களுக்கு முன்னரே கொடியேற்றமும் பின் ஒன்பது நாளும் திருவிழாவும் நடந்து அமாவாசைத் தீர்த்தத்துடன் நிறைவுறுதல் ஆண்டுதோறும் இத்தலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சியாகும். இங்கு நடைபெறும் அடுத்த பெருவிழா விநாயக ச ஸ்டி விரதமும் கயமுகாசூரன் போர் நிகழ்ச்சியுமாகும். கந்தசட்டி விரதம் அதற்கான கந்தபுராணப் படிப்பு என்பனவும் இங்கு நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகளாகும். எனினும் தைப்பூசத்தன்று நவக்கிரகக் கோவிலில் நவக்கிரகங்களுக்கு தனித்தனி அபிஷேகமும் செய்து விசேட பூசையொன்று நடப்பது மற்றய கோவில்களில் நடைபெறாதவொரு தனி நிகழ்ச்சியாகும். கோவிற் பூசைகளை பிராமணக் குருக்களே வேதாகம முறைப்படி தினம் மூன்று வேளைகளும் ஆற்றி வருகின்றார்.

எமக்குக் கிடைத்துள்ள குறிப்புக்களின்படி 1880ம் ஆண்டில்த்தான் தற்போதுள்ள அமைப்பினை மாமாங்கக் கோவில் பெற்று முதலாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றிருக்கின்றது. அக்காலம் முதல் கொடியேற்றத்தினை அடுத்து ஐந்து திருவிழாக்களும் தீர்த்தமும் நடைபெற்று ஒழுங்காக இருந்து ள்ளது. அப்போது நடைபெற்ற கோவில் கட்டிட வேலைகளுக்கு வேண்டிய செங்கற்களையும் சி ரமதான வேலையினையும் அவ்வாறு வேலை செய்வோருக்கான உணவு வசதிகள் முதலியனவற்றையும் கொத் தியாவலை, கன்னங்குடா, ஊறணி, செங்கலடி முதலான கிராமங்களில் வாழ்ந்த மக்கள் மனமுவந்தளித்து ள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

திருவிழாக்களை மேலும் நடாத்துவதற்குச் சேர்ந்தோரின் தொகை முதலானவற்றை ஒட்டி திருவிழாக்கள் பத்தாக அதிகரிக்கப் பெற்றுள்ளன. எனினும் இந்த மாற்றம் எப்போதிருந்து இடம்பெற்றது என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை! 1963ம் ஆண்டு கோவிலில் சில புனருத்தான வேலைகளும் தொடர்ந்து மகா கும்பாபிசேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தலத்தின் பெரும் சிறப்பு நோக்கி திரு. ராஜன் செல்வநாயகம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அரசாங்கத்தைக் கொண்டு பெரும் பணச் செலவில் தூர்ந்து போயிருந்த இவ் ஆலயத்தின் திருக்குளத்தை மேலும் ஆகர்ந்து குளத்தைச் சுற்றி படிக்கட்டுகளும் அமைத்து மின்சார விளக்குகளால் அழகுபடுத்தி திரு வீதிகளையும் அகலமாக்கித் திருக்குளத்தின் புனிதத்தையும் மேலும் வளப்படுத்தியுள்ளார். தற்பொழுது இவ் ஆலயத்தை மட்டக்களப்பு இந்துக்களின் புனிதத்தலமாக பிரகடனப் படுத்தல் வேண்டும் என்ற கோரிக்கையும் பொது மக்களிடையே வலுப்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு வளர்ந்து கொண்டே வரும் மாமாங்கேச்சுரத்தின் மீது முன்பிருந்தே புலவர்கள் பல பாடல்களை அருளியுள்ளனர். வித்துவான் சரவணமுத்து அவர்களால் "மாமாங்கேச்சுரர் கீர்த்தனை" என்னும் நூர்லும் "மாமாங்கர் பதிகம்" என்ற நூலும் பாடப்பெற்ருள்ளன. இயல் இசை நாடகம் என்ற மூன்றிலும் வல்லவரான திருமிகு சரவணமுத்தனாரது இசைவளம் இழையோடிய பாடல்களமைந்த இந்நூற் பாடல்கள் படிப்போரது கல் மனங்களையும் பக்தியில் கரைத்து விட வல்லன. "மாமாங்கர் ஊஞ்சல்" "மாமாங்கர் காவடிச் சிந்து" என்ற வேறு இரு நூல்களும் இத்தலத்தின் மீது பாடப்பட்டுள்ளன.

மாமாங்சுரர்மீது பித்துக்கொண்டவர் போன்ற பெரும் பக்தரான காலஞ்சென்ற பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள் "மாங்கேசுரர் பதிகம்" என்ற பக்தி நலம் சொட்டும் விருத்தம், விருத்தப்பாக்களால் அமைந்த ஒரு நூலைப் பாடியுள்ளார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அளித்து ள்ளமாங்கேசுரப் பதிகமும்" மண்டூர் பூ. சின்னையா ஆசிரியர் அவர்கள் யாத்துள்ள "மாமாங்கப் பிள்ளையார் விருத்தம்" என்னும் பக்திப் பதிக நூலும் மாங்கேசுரப் பெருமானது திருவருட் பெருக்கினை நன்கு விளக்குவனவாகும்.

இந் நூல்கள் எவையும் தற்போது புளக்கத்தில் உள்தாக தெரியவில்லை. ஆனாலும் இப் பாடல்களின மூலச் சுவடிகள் ஆலய நிர்வாகத்தினரால் பாதுகாக்கப் படுகின்றதாக அறியப் படுகின்றது. இவை அனைத்தும் மீண்டும் வெளிக்கொணருதல் இத் திருத்தல வளத்துக்கு மட்டுமன்றி தமிழ் மொழியினதும் தமிழ் இலக்கியப் புலமையினதும் வளத்திற்குச் சான்றாகிப் பெரும் பயன் தர வல்லதாகும் என ஆலய நிர்வாகம் நம்புவதாக் கருதப்படுகின்றது.

உசாத்துணை
மட்டக்களப்பு மாங்கேசுரர் ஆலய நிர்வாகம்
15-மேலமாடித் தெரு மட்டக்களப்பு



# விரதத்தின் அடிப்படை என்ன?

விரதம் என்பதற்கு ஒன்றையே எண்ணி அதில் மனம் இலயித்திருத்தல் என்பது பொருள். வரித்தல் என்பதிலிருந்தே விரதம் என்ற சொல் பிறந்தது என்று கூறலாம். வரித்தல் என்பதற்கு கை கொள்ளுதல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல் என்பது பொருள்.

உணவு உண்ணாமலிருத்தலும் மிதமாக உணவை உண்பதும் தீயவற்றை நீக்கி நல்லவற்றை உண்பதுமாகிய உணவு நியமமே "விரதம்" என அழைக்கப்படுகிறது. ஆனால் இது விரதத்தின் முதற் நிலை என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வாறு இருப்பதுவே முழுமையான விரதம் என்று கூற முடியாது. மனம் அடங்கக் கற்பதே விரதத்தின் முதற்படியாகும். உணவை ஒழித்து இருப்பது விரதம் அல்ல. எண்ணங்களை ஒடுக்கி, சிந்தைகள் ஏதும் இல்லாமல் இருப்பதே "விரதம்" என்கிறார் ரமணர்.

குரங்கு போல் அலைந்து திரியும் மனத்தை அடக்கி நிறுத்தி இறைவன் திருவடியில் நிலைத்திருத்தலே சிறப்பான விரதத்தின் முதற்படி என்று கூறலாம்.

## கிழமைக்கான விரதங்களும், அவற்றின் பலன்களும்

எந்தக் கிழமைகளில் விரதம் இருந்தால் என்ன பலன் கிடைக்கும் என்பதை தெரிந்து வைத்திருத்தல் மிகவும் அவசியம். விரதம் என்றாலே சாப்பிடாமல் இருந்து கடவுளை வணங்குவது என்று பொதுவாக அனைவரும் நினைக்கின்றனர்.

நம் எண்ணங்களை ஒரு கட்டுப்பாடுடன் வைத்து, மனதை சந்தோஷமாக வைப்பதே விரதம் ஆகும். ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, உடலை புதுப்பிப்பதே விரதத்தின் நோக்கமாகும்.

சிற்றுண்டிகளை சாப்பிட்டு விரதம் இருப்பதை விட, பால், பழம் மட்டும் அருந்தி விரதம் இருக்கலாம். விரதத்தை எல்லா மதத்தினரும் கடைபிடிக்கிறார்கள். அது மனதை உறுதியாக வைக்க உதவுகிறது.

அசைவ உணவை தவிர்த்து, சைவ உணவு உண்பது, நீர், பால், பழம், ஜூஸ் இவற்றில் ஏதாவது ஒன்றை அருந்தி விரதம் இருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விரதத்தை கடைப்பிடிக்கிறார்கள். எந்த முறையை பின்பற்றினாலும், பலன் கிடைப்பது நிச்சயம்.

ஞாயிற்றுக்கிழமை:
விரதம் இருந்தால் தீராத நோய் அகலும்.

திங்கள்கிழமை:
விரதம் இருந்தால் கணவனின் பரிபூரண அன்பை பெறலாம்.

செவ்வாய்க்கிழமை:
விரதம் இருந்தால் கணவன் மனைவி தகராறு நீங்கி ஒற்றுமையுடன் வாழலாம்.

புதன்கிழமை:
விரதம் இருந்தால் நோய்கள் தீரும்.

வியாழக்கிழமை:
விரதம் இருந்தால் புத்திர பாக்கியம் கிட்டும்.

வெள்ளிக்கிழமை:
விரதம் இருந்தால் கணவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வர்.

சனிக்கிழமை:
விரதம் இருந்தால் செல்வம் பெருகும்.

திருச்சிற்றம்பலம்
# சைவநெறிக்கூடம்

## அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, , 3008 Bern, Switzerland
☎ 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch
facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

# வழிபாட்டுநாட்காட்டி

*வாரத்தில் 7 நாட்களும் காலை 08.00 மணிமுதல் 20.30 மணிவரை திருக்கோவில் திறந்திருக்கும்.*

**மாலை 18.30 மணிமுதல் 20.00 மணிவரை வழிபாடு இடம்பெறும்.**

## ஆடவை (ஆனி)

| | |
|---|---|
| 07.06.17 புதன்கிழமை | விடைமுறம் [வைகாசி விசாகம்] திருவழிபாடு மாலை 16.30 மணிமுதல் |
| 08.06.17 வியாழக்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 30.06.17 வெள்ளிக்கிழமை | ஆடவை [ஆனி] உத்தரம், மாலை 17.00 மணிமுதல் |

## கடகம் (ஆடி)

| | |
|---|---|
| 08.07.17 சனிக்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 16.07.17 ஞாயிற்றுக்கிழமை | கடகப்பிறப்பு [ஆடி], மாலை 18.30 மணிமுதல் |
| 22.07.17 சனிக்கிழமை | கடகத்திங்கள் மறைமதி நோன்பு [ஆடிஅமாவாசை], காலை 10.00 மணிமுதல் |
| 26.07.17 புதன்கிழமை | மடங்கற்கணை [ஆடிப் பூரம்], மாலை 17.00 மணிமுதல் |

## மடங்கல் (ஆவணி)

| | |
|---|---|
| 04.08.17 வெள்ளிக்கிழமை | இலக்குமி நோன்பு மாலை 17.00 மணிமுதல் |
| 07.08.17 திங்கட்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல்; |

**தபால் கணக்கு இல.:**
**Postfinance 30-468890-2**

*கணக்குரிமை:*
Verein SAIVANERIKOODAM, Laubeggstr.21, 3006 Bern, Switzerland
*வங்கி*/ Bank: Credit Suisse, 3001 Bern *கணக்குஇல* / Konto: 771 606 - 21
IBAN: CH26 0483 5077 1606 2100 0 BC Nr: 4835

# Radio-by-Phone

## தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி



0221 9888014

01 80140659

044 5133032

0330 332 6349

0787 72527

அழையுங்கள் வானொலியைக் கேட்டுமகிழுங்கள்...

மேலதிக விபரங்களுக்கு:

**www.etr.fm**

ETR

